தெரிவித்துக்கொள்கிறேன். டெல்டா மாவட்டங்களில் 1,508 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள், டெல்டா அல்லாத மாவட்டங்களில் 507 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்வதோடு, டெல்டா மாவட்டங்களில் நேற்றைக்கு கொள்முதல் செய்யப்பட்ட நெல் 15,768 மெ.டன் என்றும், டெல்டா அல்லாத மாவட்டங்களில் நேற்றைக்கு கொள்முதல் செய்யப்பட்ட நெல்லின் அளவு 8,430 மெ.டன் என்பதனையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 160, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். சரவணன், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

160—

கலை மற்றும் அறிவியல் கல்லூரி

***7087—திரு. எஸ்.எஸ். சரவணன்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை தெற்கு தொகுதியில் கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், உயர் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மதுரை தெற்கு தொகுதியில் கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவங்குவது குறித்த கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். சரவணன், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.வி. இராஜன் செல்லப்பா அவர்கள்.

திரு. வி.வி. இராஜன் செல்லப்பா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுக்கு நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஒரே ஆண்டில் 11 மருத்துவக் கல்லூரிகளைக் கண்ட சாதனையாளர், குடிமராமத்தில் மிகப் பெரிய புகழுக்குரியவர், இன்றைக்கு பல்வேறு திட்டச் சாதனைகளைச் செய்து, 7 புதிய கல்லூரிகளை அறிவித்து, உயர் கல்வித் துறையில் இந்திய துணைக் கண்டத்தில் தமிழகம்தான் முதலிடம் என்பதை உருவாக்கிக் காட்டியிருக்கிற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், அவருக்கு உற்ற துணையாக இருக்கிற, விமர்சனங்களுக்கு அப்பாற்பட்டு, சாதித்து வருகிற மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களுக்கும், மரபு மாறாமல் விதிகளைப் பின்பற்றுகிற, கழகத்தின் முன்னோடி, மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களுக்கும் நன்றியைக் கூறிக்கொள்கிறேன்.

மதுரை மாவட்டத்தில் மதுரை வடக்கு தொகுதியில் உள்ள Constituent College என்று அறிவிக்கப்படுகின்ற மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தின் உறுப்புக் கல்லூரி சுமார் 4,500 மாணவ, மாணவியர்களைக் கொண்டிருக்கிறது. 4,500 மாணவ, மாணவியர்களைக் கொண்ட அந்த உறுப்புக் கல்லூரி, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் 5 இலட்சம் ரூபாய் நன்கொடை அளித்து தொடங்கி வைக்கப்பட்ட கல்லூரி. அந்தக் கல்லூரி 100–க்கும் மேற்பட்ட பேராசிரியர்கள் மற்றும் 4,500 மாணவ, மாணவியர்களைக் கொண்டு, மதுரையின் மையப் பகுதியில் உறுப்புக் கல்லூரியாக இருக்கிறது. நம்முடைய அரசு வெற்றிகரமான அரசு. ஏற்கெனவே அனைத்து பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகளையும் அரசுக் கல்லூரிகளாக மாற்றியிருக்கிறது; மிகச் சிறப்பான சாதனையைச் செய்திருக்கிறது. மேலும், மதுரையில் U.G. B.E.–ம் தொடங்கியிருக்கிறது. மதுரையைப் பொறுத்தவரைக்கும், மகளிர் அரசு கல்லூரி ஒன்று மட்டுமே இருக்கிறது. அங்கே ஆண்கள் கல்லூரியோ, வேறு கல்லூரியோ இல்லை. ஆகவே, அன்பு கூர்ந்து, ஏற்கெனவே மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களும் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களிடத்திலும் கனிவோடு இந்த மனுவினைக் கொடுத்திருக்கிறார்கள். மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் அதனைப் பரிவோடு கவனித்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த உறுப்புக் கல்லூரியை அரசுக் கல்லூரியாக மாற்றுவதற்கான பரிசீலனை எந்த அளவிற்கு முன்னேற்றத்தில் உள்ளது என்பதை

மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களிடம் கேட்க விரும்புகிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் கல்லூரியைப் பொறுத்தவரை, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லும் முழு புள்ளிவிவரங்களும் உண்மையானவை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், ஏற்கெனவே இதே சட்டமன்றப் பேரவையில் அந்தக் கேள்வியைக் கேட்டிருக்கின்றார்கள். மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சராக இருந்து, உயர் கல்வித் துறையில் பல்வேறு மாற்றங்களை ஏற்படுத்திய இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய வழியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுடைய தலைமையில் உயர் கல்வியில் பல்வேறு மாற்றங்களை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்ற காலக்கட்டத்தில்தான், பல்கலைக்கழகத்தினுடைய உறுப்புக் கல்லூரிகளாக 41 கல்லூரிகள் தமிழகத்திலே இயங்கிக் கொண்டிருந்தன. அதிலே மாணவர்கள் சேர்க்கைக்கான கட்டணத்தைப் பொறுத்தவரையில், அரசுக் கல்லூரிகளுக்கும், உறுப்புக் கல்லூரிகளுக்கும் வித்தியாசம் இருக்கிறது என்ற நிலையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பார்வைக்கு எடுத்துச் சென்றவுடனேயே, அந்த 41 கல்லூரிகளும் உறுப்புக் கல்லூரியிலிருந்து அரசுக் கல்லூரியாக மாற்றப்படும் என்று அறிவித்து, அதில் 14 கல்லூரிகளுக்கு அரசாணைகள் வெளியிடப்பட்டு, ஒட்டுமொத்த மாணாக்கர்களுடைய சேர்க்கைக்காக வழங்கப்படுகின்ற கட்டணத்தை 41 உறுப்புக் கல்லூரிகளிலேயும் அரசுக் கல்லூரியில் பெறக்கூடிய சிறப்புக் கட்டணத்தை மட்டும் வசூலிக்கக்கூடிய நிலைமையை உருவாக்கித் தந்தார்கள். அதேபோல, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்திருக்கின்ற மதுரையில் இருக்கின்ற கல்லூரியானது 4,835 மாணாக்கர்களைக் கொண்ட ஒரு கல்லூரியாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அந்தக் கல்லூரி மதுரையினுடைய மையப் பகுதியில் இருக்கின்ற காரணத்தினால், அனைத்து மாணாக்கர்களும் அந்தக் கோரிக்கையை வைத்திருக்கின்றார்கள். இன்றைக்கு அது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் பார்வைக்கு எடுத்துச் செல்லப்பட்டிருக்கிறது. அது அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது. கூடிய விரைவில்

அதனை அரசுக் கல்லூரியாக மாற்றுவதற்கான முயற்சியில் உயர் கல்வித் துறையானது ஈடுபட்டு, செயல்படுத்திக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுடைய அனுமதியோடு, கூடிய விரைவில் அது பரிசீலிக்கப்படும் என்பதை இந்த நேரத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்து அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.டி.கே. ஜக்கையன் அவர்கள்.

திரு. எஸ்.டி.கே. ஜக்கையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டு, நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவர் மற்றும் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் இன்றையதினம் ஆட்சியை மிகச் சிறப்பாக நடத்திக் கொண்டிருக்கிற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும் மற்றும் இருக்கிற மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் அனைவருக்கும் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்றையதினம் நம்முடைய தமிழக அரசு, கல்வித் துறையிலே மிகப் பெரிய அளவில் சாதனைகளை நிகழ்த்திக் கொண்டிருக்கிறது.

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. எஸ்.டி.கே. ஜக்கையன்: பள்ளிக் கல்வித் துறையாக இருந்தாலும் சரி, உயர் கல்வித் துறையாக இருந்தாலும் சரி, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு இன்றைய தினம் பல்வேறு சாதனைகளை நிகழ்த்திக் கொண்டிருக்கிறது. குறிப்பாக, இந்த அரசு, உயர் கல்வித் துறையில் இந்திய அளவிலே முதன்மையிடத்தைப் பெறுகின்ற அளவில் அற்புதமான ஆட்சியை இன்றையதினம் நடத்திக் கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அந்த வகையிலே, என்னுடைய தேனி மாவட்டம், கம்பம் சட்டமன்றத் தொகுதியில் இருக்கின்ற கம்பம் நகர், சின்னமனூர் நகர் அல்லது தேவாரம் பேரூராட்சியில் கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஒன்றைத் துவக்க வேண்டுமென்று ஏற்கெனவே

2020 மார்ச் 23]

நான் கோரிக்கை வைத்திருக்கிறேன். அந்தக் கோரிக்கையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச்சென்று நிறைவேற்றித் தர வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சார்ந்திருக்கிற கம்பம் சட்டமன்றத் தொகுதியானது தேனி மாவட்டத்தில் இருக்கிறது. தேனி மாவட்டத்தில் ஏற்கெனவே மூன்று அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. மேலும், மூன்று அரசு உதவி பெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும் அங்கு இயங்கிக்கொண்டிருக்கின்றன. ஆகவே, மாணாக்கர்களின் சேர்க்கை விகிதத்தைப் பொறுத்து, எதிர்வரும் காலக்கட்டங்களில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் சேருவதற்கு மாணாக்கர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கூடுதலாக பெறப்பட்டால் அதுகுறித்து அரசு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 162, மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. நாராயணன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

162—

கால்நடை மருத்துவமனை

***62729—திரு. வெ. நாராயணன்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாங்குநேரி தொகுதி, பாளையங்கோட்டை ஊராட்சி ஒன்றியம், திடியூர் ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?